இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 43 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 05 – சனிக்கிழமை 21 செப்டம்பர் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 43 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 05 - Saturday 21 September 2024 - Chennai 12 Pages ₹ 5.00

## மாற்றுத் திறனாளி மாணவ - மாணவியரின்

# கல்வி உதவித் தொகை இரு மடங்காக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப்.21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ - மாணவியர் உதவித் தொகையை இருமடங்காக உயர்த்தி ரூ.14 கோடியே 90 லட்சத்து 52 ஆயிரம் ரூபாயினை அனுமதித்து ஆணை யிட்டுள்ளார்.**

**ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபடும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒருவருக்கு ரூ.1 இலட் சம் வீதம் ரூ.50 இலட்சம் அனுமதித்தும் ஆணை வெளியிட்டுள்ளார்.**

**அதன் விபரம் வருமாறு:-**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், நசுக் கப்பட்டவர்கள் முதலானவர்களை ஆதிக் கவாதிகளிடமிருந்து காக்கும் நோக்கில் பல்வேறு சலுகைகளை வழங்கி, அவர் களெல்லாம் முன்னேறுவதற்கு வித்திட்ட சமூக நீதிக் காவலர் என்பது உலகறிந்த உண்மையாகும். அப்பெருமகனார் உடல் உறுப்புகளும் மனவளர்ச்சியும் குன்றிய நிலையில் வாழ்ந்தவர்களுக்குப் புத்து ணர்வும் புது வாழ்வும் அளிப்பதற்காக 'ஊனமுற்றவர்' என்ற சொல்லை நீக்கி 'மாற்றுத் திறனாளிகள்' என அவர்களுக் குப் பெயர் தந்து அவர்கள் நலன்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் கீழ் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை என 27.3.2010 அன்று தனியே ஒரு துறையை புதிதாக ஏற்படுத்தி, அதன்



மூலம் பல்வேறு சிறப்புத் திட்டங்களை உருவாக்கி எண்ணற்ற சலுகைகளை வழங்கி. அவர்கள் வாழ்விலும் வளம் சேர்த்தார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள், முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.1,000 என்பதை ரூ.1,500ஆகவும் உயர்த்தி வழங்கினார்கள். அத்துடன், தற்போது, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவி யர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையையும் உயர்த்தி அவர்கள் ஊக் கமுடன் கல்வி கற்க உதவி செய்துள்ளார்.

அதாவது, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்தி றனாளி மாணவ, மாணவியர்க்கு வழங் கப்படும் கல்வி உதவித் தொகை ஆண் டுக்கு 1,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 2,000 ரூபாய் என் றும்;

6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவ-மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 3,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 6,000 ரூபாய் என்றும்;

**இரு மடங்கு உயர்வு**

9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவ - மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 4,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 8,000 ரூபாய் என்றும் உயர்த்தி வழங் கிட ஆணையிட்டுள்ளார்.

அதேபோல, கல்லூரிகளில் பட்டப் படிப்பு படிக்கும் மாற்றுத் திறனாளி மாணவ-மாணவியர்க்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை 6 ஆயிரம் ரூபாய் என்பதை 12 ஆயிரம் ரூபாய் என இருமடங்காக உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்.

மேலும், தொழிற்கல்லூரிகளிலும், பட்ட மேல்படிப்புகளிலும் படிக்கின்ற மாற் றுத் திறனாளி மாணவ-மாணவியர்க்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை 7 ஆயிரம் ரூபாய் என் பதை 14 ஆயிரம் ரூபாயாக இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கிடவும் ஆணை யிட்டுள்ளார்.

இப்படி, மாற்றுத் திறனாளிகள் உள் ளங்களில் தேங்கிக் கிடக்கும் ஏக்க உணர் வுகளைத் தீர்க்கும் வகையில் அவர் களுக்கு அனைத்து வகையிலும் உதவி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாற்றுத் திறனாளி மாணவர் களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் வகையிலும் அவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலும் - அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவி ஊக்கத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி அதற்காக 14 கோடியே 90 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாயை அனுமதித்து 4.7.2023 அன்று ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

**ஆராய்ச்சிப் படிப்புகள்**

பள்ளி, கல்லூரி படிப்புகளுடன், மாற் றுத் திறனாளி மாணவ - மாணவியர்கள் படிப்பை நிறுத்திவிடக் கூடாது என்பதற் காக அவர்கள் ஆராய்ச்சிப் படிப்புகளிலும் ஈடுபட வேண்டும் என்னும் விழை வோடு, ஆராய்ச்சிப் படிப்பில் சேரும் மாற் றுத்திறனாளி மாணவ - மாணவியர்க்கு ஊக்கமளிப்பதற்காக அவர்களுக்கு முதல மைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை திட்டத்தின்கீழ் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் 50 மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று ஆணையிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் பிறப்பித்துள்ள இந்த ஆணைகளின் பயனாக தமிழ்நாட்டில் உள்ள மாற்றுத் திறனாளி மாணவ-மாணவியர் வாழ் வில் ஊக்கம் பெருகும், ஆக்கம் சேரும், உற்சாகம் பொங்கும், அறிவொளி பரவும், அவர்கள் வாழ்க்கை சிறக்கும் என்பது உறுதியாகும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


## சிந்துவெளி நாகரிகத்தை திராவிட இனத்துடன் தொடர்புபடுத்திய

# தொல்லியல் அறிஞர் சர் ஜான் மார்ஷலுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பக்கத்தில் பதிவு!

**சென்னை, செப். 21-**

**சிந்துவெளி நாகரிகத்தை இதே நாளில் (செப்.20) நூறு ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித்ததோடு அப்போது கண்டெ டுக்கப்பட்ட பொருட்களின் அடிப் படையில் அதனை திராவிட இனத்துடன் தொடர்புபடுத்திய தொல்லியல் அறிஞர் சர். ஜான் மார்ஷல் அவர்களை நினைவு கூர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்கள் நன்றி தெரிவித் துக் கொண்டுள்ளார்.**




சிந்து நதிக் கரையில் பல் லாயிரம் ஆண்டுகளுக்கு முன் னர் செழித்து வளர்ந்த சிந்துவெளி நாகரிகம், தொல்லியல் ஆய்வின் மூலம் உலகுக்கு அறிவிக்கப்பட்டு இன்றுடன் நூறாண்டுகள் ஆகின் றன.

1920களில் இந்தியத் தொல்லி யல் துறை இயக்குநர் சர் ஜான் மார் ஷல் தலைமையிலான குழு மேற் கொண்ட அகழாய்வில், வெண்கலக் கால ஹரப்பா, மொகஞ்சதாரோ உள்ளிட்ட நகரங்கள் குறித்த தகவல் கள் கிடைத்தன.

1924 செப்டம்பர் 20இல், 'தி இல் லஸ்ட்ரேடட் லண்டன் நியூஸ்' இத ழில் ஜான் மார்ஷல் எழுதிய கட்டுரை ஒன்றின் மூலம் சிந்துவெளி நாகரி கம் கண்டறியப்பட்டதை உலகத் துக்கு அறிவித்தது. கீழடிக்கும் சங்க இலக்கியப் பதிவுகளுக்கும் இடையி லான தொடர்பு குறித்தும் ஆய்வாளர் கள் தொடர்ந்து பேசிவருகின்றனர்.

சங்க சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நகரப் பண்பாடு, சிந்துவெளித் தொல்லியல் சான்று களுடன் பொருந்திப்போவதாகச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கீழடிக் கும் சிந்துவெளிக்கும் தொடர்பு இருப் பதாகவும் வலுவான கருதுகோள்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்திய வரலாற்றை வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களோடு மட் டும் தொடர்புபடுத்திக் காலவரை யறை செய்யப்பட்டு வந்த காலக்கட் டத்தில், இந்தியத் துணைக்கண்டத் தின் வரலாறு அதற்கும் முந்தையது; அது நகர்மய வரலாறு, அறிவியல் சார்ந்த, வணிகம் சார்ந்த, மக்கள் மைய வரலாறு என்று அனைவருக் கும் அறிவித்த பெருமை இந்தியத் தொல்லியல் துறையின் தலைவரா கப் பணியாற்றிய ஜான் மார்ஷ லையே சேரும்.

"சிந்து, பஞ்சாப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் முதிர்ந்த பண்பாட் டோடு, அருமையாகக் கட்டியெழுப் பப்பட்ட நகரங்களில் உயர்தரமான கலை, கைவினைத் திறன்களோடும், வளமான எழுத்தறிவோடும் வாழ்ந் துள்ளனர்" என்ற ஜான் மார்ஷலின் கருத்து இந்தியத் துணைக் கண்ட வரலாற்று எழுத்திய லின் போக்கைப் புரட்டிப் போட்டது.

இந்நிலையில், நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தி யத் துணைக்கண்டத்தின் வர லாற்றை மாற்றி வடிவமைத்த சர். ஜான் மார்ஷல் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வெளியான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**மிகச் சரியாக நூறு ஆண்டு களுக்கு முன்பு, 20 செப்டம்பர் 1924 அன்று, சர்.ஜான் மார்ஷல் அவர் கள் சிந்துவெளி நாகரிகத்தின் கண்டு பிடிப்பை அறிவித்து, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை என் றென்றைக்குமாக மாற்றி வடிவமைத் தார். ஜான் மார்ஷல் அவர்களது பங் களிப்பை நன்றிப்பெருக்குடன் பின்னோக்கி அவருக்கு இந்நாளில் நன்றி கூறுகிறேன்.**

**சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெ டுக்கப்பட்ட பொருட்களின் அடிப்படை யில் சரியான தீர்மானத்துடன் அதனை அவர் திராவிட இனத்துடன் தொடர்பு படுத்தினார்.**

**வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கண்டு பிடிப்பின் நூற்றாண்டினை ஒரு பன் னாட்டுக் கருத்தரங்குடனும், சர் ஜான் மார்ஷல் அவர்களின் முழுவுருவச் சிலையினைத் தமிழ்நாட்டில் நிறுவியும் கொண்டாடப்படும் என எனது அரசு ஏற் கெனவே அறிவித்திருக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## 'நீட்' விலக்கு குறித்து

# ஒன்றிய அரசுக்கு தெளிவான விளக்கம் தந்துள்ளோம்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

சென்னை, செப். 21–

சென்னை தலைமைச் செயல கத்தில் 2024–25 சட்டப் படிப்பிற் கான முதுநிலை முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான ஆணையை சட்டத்துறை அமைச் சர் ரகுபதி வழங்கினார் .

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் ரகுபதி தெரிவித்ததாவது:–

நீட் விலக்கு குறித்து ஒன்றிய அரசு இரண்டு கேள்விகளை கேட் டுள்ளது. இந்தியாவில் பல மாநி லங்கள் நீட் தேர்வை ஏற்றுக் கொண்டுள்ளது; தமிழ்நாடு மட்டும் ஏன் நீட் விலக்கு கேட்கிறீர்கள் என காரணம் கேட்டனர். அதற்கு தமிழ் நாடு அரசுக்கு போதிய விளக்



கத்தை தந்து இருக்கிறோம்.

இந்தியாவில் பல மாநிலங் களில் நீட் இருந்தாலும் தமிழ்நாட் டின் நீட் இல்லாத காலத்திலேயே இந்தியாவிலேயே தலைசிறந்த மருத்துவர் தந்துள்ள மாநிலம் தமிழ் நாடு. சாதாரண மாணவர்கள் கூட சிறந்த மாணவர்களாக உருவாக முடியும் என அதற்கான உதாரணங் களை தந்துள்ளோம்.

நீட் தேர்வினால் கிராமப்புற மாணவர்கள் அதிகம் பாதிக்கபடு கின்றனர் என விளக்கம் தந்துள் ளோம்.

ஒன்றிய அரசு நீட்டிற்காக ஒரு சட்டத்தை கொண்டு வந்துள்ளது. நீட் சட்டத்திற்கு தமிழ்நாடு அரசின் சட்டம் முரண்பாடாக உள்ளது என்று தெரிவித்துள்ளது. ஒன்றிய அரசின் நீட் சட்டம் முரண்பாடாக உள்ளதால் தான் தமிழ்நாடு அரசு சட்டம் இயற் றியுள்ளது என தெளிவாக விளக்கி யுள்ளோம்.

தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வு தேவையில்லை எனவும் தெளிவாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் டெல்லி பயணத்தின் போது பிரதமரைச் சந்தித்து நீட் தேர்வு விலக்கு குறித்து வலியுறுத்துவார்.

ஆன்லைன் ரம்மி விளம்ப ரத்தை ஒன்றிய அரசு தான் கட்டுப் படுத்த வேண்டும், இருந்த போதும் தமிழ்நாடு அரசு இதை முறைப் படுத்த அனைத்து நடவடிக்கையும் மேற்கொண்டு வருகிறது.

பழமையான சிறைச் சாலை களை தற்போது தமிழ்நாடு அரசு புதுப்பித்து வருகிறது.

இவ்வாறு சட்டத்துறை அமைச் சர் ரகுபதி தெரிவித்தார்.

